1. இந்நகராட்சி குடிநீர் நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் சிறுமின்விசை பம்பு மற்றும் கை பம்பு 2020-21-ஆம் ஆண்டு வருடாந்திர பழுது மற்றும் பராமரிப்பு பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : 1) குடிநீர் நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2335/2020/இ2.

2. வாணியம்பாடி நகராட்சியின் பிற்கால தேவைக்கென அம்பூர்பேட்டை, வேப்பமரச்சாலை கிராம புல எண்கள் 101/**1E2**, 101/1**D**, **103/1C**, **103/1B1A**, **105/1A10**, **105/1A14**, **105/1A15**, **105/1A16**, **105/1A17** மற்றும் **105/1A18**-ல் 6.79 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடம் கிரையம் பெறப்பட்டு நகராட்சியின் சுவாதீனத்தில் இருந்து வருகிறது. மேற்கூரியவாறு நகராட்சியால் கிரையம் பெறப்பட்டதிற்கான பதிவு செய்யப்பட்ட பத்திரங்களின் அடிப்படையில் நில அளவை பதிவேடு மற்றும் வருவாய் துறை ஆவணங்களில் பட்டா பெயர் மாற்றம் மற்றும் உட்பிரிவு செய்து தரக்கோரி வட்டாட்சியர் வாணியம்பாடி அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு நகராட்சியால் இதற்கென கட்டணம் ஏதேனும் செலுத்த வேண்டியிருப்பின், இதற்கென தேவைப்படும் தோராய செலவினம் ரூ.15,000/-த்தினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.3269/2002/எப்1

3. வாணியம்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கடைகள் மற்றும் இதர நிறுவனங்களுக்கு தொழில்வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வந்தது. தற்போது ஏற்கனவே இருந்த கடைகாரர்கள் காலி செய்துவிட்டும் மற்றும் கடை முடப்பட்டு சென்றுவிட்டதால் அந்த நபர்களிடமிருந்து தொழில் வரி வசூலிக்க இயலாமல் நிலுவையாக இருந்து வருகிறது என நகராட்சி வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வர் குறிப்பு வழங்கியதின் அடிப்படையிலும் தற்போது பட்டியலில் காணும் கடைகள் தற்போது செயல்படாத காரணத்தாலும் கேட்பினை நீக்கம் செய்யலாம். எனவே, 2005-2006 முதல் 2020-2021 முதலாம் அரையாண்டுவரை வசூலிக்க இயலாத 232 வரிவிதிப்பு எண்களின் கேட்பு தொகை ரூ.784295/-யை தள்ளுபடி செய்யவும் வரிவிதிப்பு எண்ணை கணிணியிலிருந்து நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| ABSTRACT FOR WRITE OFF | | |
|---|---|---|
| **S.NO** | **YEAR** | **AMOUNT** |
| 1 | 2005-06 | 380 |
| 2 | 2006-07 | 6930 |
| 3 | 2007-08 | 7005 |
| 4 | 2008-09 | 8645 |
| 5 | 2009-10 | 12075 |
| 6 | 2010-11 | 15995 |
| 7 | 2011-12 | 28745 |
| 8 | 2012-13 | 37160 |
| 9 | 2013-14 | 50905 |
| 10 | 2014-15 | 65990 |
| 11 | 2015-16 | 80980 |
| 12 | 2016-17 | 91640 |
| 13 | 2017-18 | 102150 |
| 14 | 2018-19 | 107575 |
| 15 | 2019-20 | 112080 |
| 16 | 2020-21 | 56040 |
| TOTAL | | 784295 |

அலுவலகக்குறிப்பு: அ) அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொழில்வரி 232 வரிவிதிப்பு எண்களின் கேட்பு தொகை ரூ.784295/-யை தள்ளுபடி செய்ய அனுமதிக்கலாம்

ஆ) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள 232 வரிவிதிப்பு எண்ணின் தொழில்வரி நீக்கம் செய்ய வேண்டிய பட்டியல் பதிவு செய்யலாம்.

ந.க.எண்:127/2018/அ4

4. வடகிழக்கு பருவமழை-2020 இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பொது மக்களை பாதுகாக்கும் வகையில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தேவையான மரம் அறுக்கும் கருவி, டீசல் மூலம் இயங்கும் மோட்டார், மின்சார மூலம் இயங்கும் நீர் உறுஞ்சும் மோட்டார், மணல் பைகள், ஜெனரேட்டர், மின் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் இதர பொருட்கள் வாங்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தினை நிர்வாக அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு : 1) 2020-21-ஆம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் செலவு செய்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1600/2019/இ1.

5. வாணியம்பாடி நகராட்சிக்கு சொந்தமான திருமண மண்டபத்திற்கு தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் மின் இணைப்பு எண்.421-019-693-க்கு கூடுதல் மின் பளு 75 கிலோவாட்டுக்கு மாற்றம் செய்ய அதற்கான கட்டணம் ரூ.1,24,957/-யை செலுத்த வேண்டும் எனவும், உதவி பொறியாளர், நகர் பிரிவு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், வாணியம்பாடி அவர்களின் க.எண்.உ.பொ/நகரம்/வாணி/ந.எண்.98/20-21, கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதின் அடிப்படையில், இத்தொகையினை 2020-21-ஆம் ஆண்டிற்கான பொது நிதியில் இருந்து ரூ.1,24,957/-யை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : 1) பொது நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் செலவு செய்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.201/2020/இ1.

**6.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.**9323/2020**/UGSS-1, நாள்.**26.08.2020**–ல் Fecal sludge treatment plant-FSTP கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணிக்கு நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளதை தீர்மானம் எண்.**64,** நாள்:**27.08.2020–**ல் மன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் Capital Grant Fund (CGF)2019-2020-ஆம் ஆண்டின் கீழ் இந்நகராட்சி வளையாம்பட்டு உரக்கிடங்கில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் கட்டும் (Fecal sludge treatment plant-FSTP) இடத்தின் மண் பரிசோதனை செய்ய

இவ்வலுவலக ந.க.எண்.2518/2019/இ1, நாள்:18.09.2020–ல் கோரியதின்படி, The Principal Thanthai Periyar Government Institute of Technology, Vellore அவர்களின் கடிதம் எண்.TPGIT/PCE/SOIL/2019–20/60–C, நாள்:07.10.2020-ன்படி மண் பரிசோதனைக்கான கட்டண தொகை ரூ.53,100/-ஐ செலுத்த கோரியதின் பேரில், மேற்படி தொகையினை 2020–21–ஆம் ஆண்டின் பொது நிதியில் இருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2518/2019/இ1.

7. வாணியம்பாடி நகராட்சி நகரமன்ற தீர்மானம் எண்:78 நாள்:30.09.2020 ஆம் தேதியில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் கோவிட் -19 கொரோனா வைரஸ் நோய் தொற்று சிகிச்சை மேற்கொள்ளும் நோயளிகள் மற்றும் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு நடவடிக்கை பணிக்குதற்காலிகமாக செயல்பட்டு வரும் இஸ்லாமியா மகளிர் கல்லூரியில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் மருத்தவக்குழு பணியாளர்களுக்கு தினசரி மூன்று வேலை உணவு சப்ளை செய்யும் பணிக்கு விலைபுள்ளிகள் கோரப்பட்டதில் 07.10.2020 இன்று வரப்பெற்ற கீழ் கண்ட விலைப்புள்ளியை ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | உணவகத்தின் பெயர் மற்றும் விலாசம் | காலை டிபன் ரூ. | காலை டீ மற்றும் பால் | பிற்பகல் உணவு ரூ. | இரண்டு வேலை சுண்டல் மற்றும் தேனீர் | இரவு உணவு ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | J.வினோத் (பநீமஹாகணபதிஉணவகம்) | ரூ.25/- | ரூ.7/- | ரூ.48/- | ரூ.30/- | ரூ.25/- | ரூ.135/- |
| 2 | ரவி மெஸ் | ரூ.28/- | ரூ.8/- | ரூ.53/- | ரூ.34/- | ரூ.28/- | ரூ.151/- |
| 3 | ஓட்டல் ஜெயபநீ | ரூ.30/- | ரூ.9/- | ரூ.55/- | ரூ.37/- | ரூ.30/- | ரூ.161/- |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள பநீமஹாகணபதி உணவகம், J.வினோத் வாணியம்பாடி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர் நோக்கி பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

3. மாவட்ட ஆட்சித்தலைவர் ,திருப்பத்தூர் அவர்களின் நேரடி அறிவுரையின் படி கோவிட் - 19 கொரோனா வைரஸ் நோய் தொற்று சிகிச்சை மேற்கொள்ளும் நோயளிகள் மற்றும் பணியாளர்கள் மற்றும் மருத்தவக்குழு பணியாளர்களுக்கு உணவு விநியோகம் செய்யுமாறு அறிவுரை வழங்கியதின் பேரில் மேற்படி குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள பநீமஹாகணபதி உணவகம் உரிமையாளர் திரு. J.வினோத் அவர்களுக்கு 18.08.2020 அன்று முதல் நாள்தோறும் உணவு வழங்கப்பட்டு வருவதால் அதற்கான தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.996/2020/எச்1

8. வாணியம்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பல்வேறு நிலைகளில் பணிக்கு செல்லும் பெண்களுக்கு அம்மா இருசக்கர வழங்கும் திட்டத்தின் கீழ் 50% விழுக்காடு அல்லது அதிகபட்ச மானிய தொகை ரூ.25000/- உடன் வாகனம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்தின் மீது பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த சிறப்பு முகாம் நடத்திடவும், மேற்படி முகாம் நடைபெறுவதை பொது மக்கள் அறியும் பொருட்டு துண்டு பிரசுரம் மூலம் விளம்பரம் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பத்தூர் அவர்களின் ஆய்வுகூட்டத்தின் போது அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்காகும் தோராய செலவினம் ரூ.5000/- பொது நிதியிலிருந்து வழங்கிட தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.363/2018/எப்1

9. கோவிட் -19 கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு முன்னெச்சரிக்கையாக நடவடிக்கையாக இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதியில் உள்ள வீடுகளின் முகவாயில் பொது மக்கள் அறியும் வண்ணம் இந்நகராட்சி சார்பாக புகை படத்துடன் கூடிய **முகக்கவசம் கட்டாயம் (மீறினால் அபராதம் ரூ.200/-)** என வாசகம் பொருத்திய ஸ்டிக்கர் 2000 ஆயிரம் எண்ணிக்கையில் அச்சடித்து வழங்கும் பணிக்கு தோராய செலவினத்தொகை ரூ.20,000/- 2020-21 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் செலவு செய்து கொள்ள நிர்வாக அனுமதிக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்

ந.க எண் :996/2020/எச்1

10. வாணியம்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பணிபுரியும் பெண்களுக்கு 2019-2020 ஆம் ஆண்டிற்கான அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பொது மக்கள் பயனடைய, மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பத்தூர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் சிறப்பு முகாம் நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பொது மக்கள் அறியும் பொருட்டு துண்டு பிரசுங்கள் அச்சடித்து வழங்கிட கீழ்கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் (ம) விலாசம் | பணி விவரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | சீனிவாசா ஆப்செட் பிரிண்டர்ஸ், 10 இக்பால் ரோடு முஸ்லீம்பூர், வாணியம்பாடி. | A4 அளவில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம் விழிப்புணர்வு ஏற்படுத்த சிறப்பு முகாம் குறித்து அறிவிப்பு 2000 எண்ணிக்கை அச்சடித்து வழங்குதல் | ரூ.3500/- |
| 2 | செம்மொழி அச்சகம், சோளவரம் வளாகம், சி.எல்.ரோடு, வாணியம்பாடி | | ரூ.3000/- |
| 3 | K.K.R.ஆப்செட் பிரிண்டர்ஸ், 10 பி.ஜே.என்.ரோட், வாணியம்பாடி. | | ரூ.3200/- |

அ.கு. 1. மேற்படி குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள செம்மொழி ஆப்செட் அச்சகம், வாணியம்பாடி அவர்களுக்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி செலவின பட்டியல் தொகை ரூ.3000/-ஐ பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.363/2018/எப்1

11. வாணியம்பாடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு 36 வார்டு பகுதிகளிலும் கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு பணி மற்றும் வடகிழக்கு பருவமழை நோய் தொற்று தடுப்பு பணி மற்றும் டெங்கு கொசு புழு ஒழிப்பு பணி மேற்கொள்ளவும் பண்டிகை காலங்களில் சுண்ணாம்பு நீர் தெளிக்கவும், கிருமினாசினி பிளிச்சிங்பவுடர் தெளிக்கவும் இந்நகராட்சியில் போதிய பொருட்கள் இருப்பு குறைவாக உள்ளதால் ஒரு மாதத்திற்கு தேவையான கீழ் காணும் பொருட்கள் அதன் எதிரே உள்ள அளவிற்கு பெற்றுக்கொள்ளவும் அதற்கான தோராய செலவினத்தொகை ரூ.2.90 லட்சம் இந்நகராட்சி 2020-2021 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் செலவு செய்து கொள்ள நிர்வாக அனுமதிக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்களின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பிளிச்சிங் பவுடர் | 3 டன் |
| 2 | சுண்ணாம்பு நீர் | 5 டன் |

அலுவலக குறிப்பு:-மன்றம் அனுமதிக்கலாம்

ந.க எண் :2714/2020/எச்1

12. இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரிந்து வந்த வரிசை எண்.1 முதல் 8 வரை உள்ள தூய்மை பணியாளர்கள் வயது முதிர்வு காரணமாக 30.06.2020 ஓய்வு பெற்றுள்ளனர். வரிசை எண்.9 மற்றும் 10 இரண்டு பணியாளர்கள் (1) 08.10.2019 அன்று A.ஆனந்தன் (2) 30.03.2020-ம் தேதி N.நாகையா இரண்டு பணியாளர்கள் பணியிடைக் காலத்தில் இறந்துவிட்டனர். மேற்படி பணியாளர்களின் பிரதி மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை அதற்கான வட்டி தொகை மற்றும் அரசால் வழங்கும் நிர்வாக பங்குதொகை அரசாணை எண்.136 நிதி (ஓய்வூதியம்) நாள் :29.02.1984 அரசாணை எண்.429 நிதி (ஓய்வூதியம்) நாள் : 15.09.2000-ன்படி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் கோட்டம் | 148 மாத சந்தா தொகை ரூ | வட்டி தொகை ரூ | நிர்வாக பங்கு தொகை ரூ | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | S.சந்திரன் 5-வது கோட்டம் | 2960 | 35528 | 10000 | 48488 |
| 2 | M.இந்திராணி 1-வது கோட்டம் | 2960 | 35528 | 10000 | 48488 |
| 3 | V.முனியம்மா 1-வது கோட்டம் | 2960 | 35528 | 10000 | 48488 |
| 4 | S.கமலா 2-வது கோட்டம் | 2960 | 35528 | 10000 | 48488 |
| 5 | M .கலாவதி 2-வது கோட்டம் | 2960 | 35528 | 10000 | 48488 |
| 6 | S.சாந்தி 3-வது கோட்டம் | 2960 | 35528 | 10000 | 48488 |
| 7 | M.ஜெயா 3-வது கோட்டம் | 2960 | 35528 | 10000 | 48488 |
| 8 | G.வள்ளி 3-வது கோட்டம் | 2960 | 35528 | 10000 | 48488 |
| 9 | A.ரத்னா க/பெ ஆனந்தன் | 2960 | 1866 | 0 | 4546 |
| 10 | N.லட்சுமி க/பெ N.நாகையா | 2960 | 6709 | 0 | 9669 |
| | மொத்தம் | | | | **402119** |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க எண் : 1149/2020/அ3

13. அவசரம் அவசியம் கருதி இப்பணிக்கு 01.10.2020-ஆம் தேதி நிர்வாக அனுமதிக்கு மன்றத்திற்கு பொருள் தயார் செய்து வைக்கப்பட்ட நிலையில் கீழ்காணும் பணியினை உடனடியாக முடிக்க வேண்டியுள்ளதால், 01.10.2020-ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி வெளியிடப்பட்டு, 16.10.2020-ஆம் தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வடகிழக்கு பருவமழை-2020 இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பொது மக்களை பாதுகாக்கும் வகையில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தேவையான மரம் அறுக்கும் கருவி, டீசல் மூலம் இயங்கும் மோட்டார், மின்சார மூலம் இயங்கும் நீர் உறுஞ்சும் மோட்டார், மணல் பைகள், ஜெனரேட்டர், மின் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் இதர பொருட்கள் வாங்குதல். | 5.00 | 1) எஸ். சுந்தரேசன் | மதிப்பீட்டு தொகையை விட 0.20% குறைவு |
| | | | 2) எஸ். தாமோதரன் | மதிப்பீட்டு தொகையை விட 0.50% அதிகம் |

அ.கு : மேற்காணும் பணிக்கு 16.10.2020-ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1600/2019/இ1.

14. வாணியம்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் கட்டணம் காலங்கடந்து விட்டதால் 1987-88 முதல் 2020-21 இரண்டாம் அரையாண்டு வரை உள்ள நிலுவை கட்டணம் ரூ.784616/-யை வசூல் செய்ய இயலாத நிலையில் 85 குடிநீர் இணைப்புகளை நேராய்வு செய்யப்பட்டதில் ஒரு சில வீடுகள் மூடப்பட்டும் ஒரு சில வீடுகள் இடிந்து விட்டநிலையிலும், மற்றும் குழாய் இணைப்புகள் கட்டணம் செலுத்த இயலாத நிலையில் நகராட்சி மூலம் துண்டிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு துண்டிப்பு செய்யப்பட்டதாலும் குடிநீர் நிலுவை வைத்துள்ள உரிமையாளர்களிடம் நீண்ட காலமாக வசூலிக்க இயலாமல் நிலுவையாக இருந்து வருகிறது. நகராட்சீ வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வர் குறிப்பு வழங்கியதின் அடிப்படையிலும் தற்போது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் காணும் 85 குடிநீர் இணைப்புகள் செயல்படாத காரணத்தாலும் கேட்பினை நீக்கம் செய்யவும் குடிநீர் கட்டணம் வரிவிதிப்பு எண்களின் கேட்பு தொகை ரூ.784616/-யை தள்ளுபடி செய்யவும், 85 குடிநீர் இணைப்பு வரிவிதிப்பு எண்ணை கணிணியிலிருந்து நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. : அனுமதிக்கலாம்.

ந.க.எண்:3668/2018/இ2

15. வாணியம்பாடி நகராட்சி நியுடவுன் பகுதியில் அமைந்துள்ள ஆணையாளர் குடியிருப்பு, நகராட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள நகர்மன்ற தலைவர் அறை மற்றும் ஆணையாளர் அறை ஆகிய இடங்களில் ஏற்பட்டுள்ள பழுகள் சரி செய்தல் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : 2020-21-ஆம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் செலவு செய்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2811/2020/இ1.

16. வாணியம்பாடி நகராட்சி வார்டு எண்.15 இராமைய்யன் தோப்பு நுண்ணியிர் உரமாக்கல் மையம், வார்டு எண்.21 நூருல்லாபேட்டை பகுதியில் நுண்ணியிர் உரமாக்கல் மையம் மற்றும் வார்டு எண்.22 வாரச்சந்தை பகுதியில் நுண்ணியிர் உரமாக்கல் மையம் ஆகிய இடங்களில் காய்கறி குப்பைகள் மழைநீர் படாதவாறு பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் அந்த இடத்தில் தேவையான மேற்கூரை அமைத்தல் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.8.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : 2020-21-ஆம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் செலவு செய்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2781/2020/இ1.

17. வாணியம்பாடி நகர எல்லைக்குள் உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக தமிழ் மாநில வார்டு மறுவரையறை ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.554/2020/EE1 நாள் :08.01.2020 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.575/2020/தேர்தல் நாள்: 21.01.2020-ல் வார்டு மறுவரையரைக்கான கருத்துக்களை உரிய காலத்திற்குள் தயார் செய்து மாவட்ட வார்டு மறுவரையறை அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அனுமதி பெற்று அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதையடுத்து இவ்வலுவலக ந.க.எண்.1982/2017/எப்.1 நாள் 10.03.2020 கடிதம் மூலம் தயார் செய்து அனுப்பப்பட்டது. எனவே அப்பணியினை மேற்கொள்ள தேவையான கீழ்காணும் பொருட்கள் வாங்கவும், உண்மை நகல் எடுக்கவும் செய்யப்பட்ட செலவு தொகை ரூ.41690/-யை 2020-21-ம் ஆண்டின் பொது நிதியில் செலவு செய்துக்கொள்ள நிர்வாக அனுமதிக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

கீழ்காணும் பணிகள் மேற்கொண்டு, உண்மை நகல் எடுக்கவும் தேவையான பொருட்களுக்கு அவசரம் அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது

| பணியின் விவரம் | பெயர் (ம) முகவர் | | |
|---|---|---|---|
| | திரு.விக்னேஷ், பிரிண்டர்ஸ் & சிராக்ஸ் நெ.654 சி.எல்.ரோடு, வாணியம்பாடி. | A.கீர்த்திகுமார், இன்ஸ்பியர் பிரிண்டர்ஸ் & சிராக்ஸ் 1/8 மாரியம்மன் கோயில் தெரு, வாணியம்பாடி. | பிரமிட், பிரிண்டர்ஸ்&சிராக்ஸ் 374,சி.எல்.ரோடு வாணியம்பாடி. |
| | தொகை | | |
| 1.வார்டு மறுவரையறைக்காக 36 வார்டுகளின் வரைப்படங்கள் CDயிலிருந்து A3 அளவில் கலர் பிரிண்ட் எடுத்து வழங்க வரைப்பட நகல் 1-க்கு | ரூ.110/- | ரூ.95/- | ரூ.100/- |
| 2. வார்டு மறுவரையறைக்காக வரைப் படங்கள் CDயிலிருந்து A2 அளவில் கலர் பிரிண்ட் எடுத்து வழங்க வரைப்பட நகல் 1-க்கு | ரூ.600/- | ரூ.400/- | ரூ.500/- |
| 3. Legal Size Xerox எடுக்க நகல் 1-க்கு | ரூ.5/- | ரூ.2/- | ரூ.3/- |
| 4.Book Binding Charge 1No | ரூ.95/- | ரூ.75/- | ரூ.80/- |

அ.கு : 1) மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளிகள் வழங்கியுள்ள A.கீர்த்திகுமார், இன்ஸ்பியர் பிரிண்டர்ஸ் & சிராக்ஸ் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1982/2017/எப்1

18. வாணியம்பாடி நகராட்சி கோவிட் -19 கொரோனா வைரஸ் நோய் தொற்று சிகிச்சை மேற்கொள்ளும் நோயாளிகள் மற்றும் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு நடவடிக்கையாக தற்காலிகமாக 18.08.2020 ஆம் தேதி முதல் செயல்பட்டு வரும் இஸ்லாமியா மகளிர் கல்லூரியில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் மருத்தவக்குழு பணியாளர்களுக்கு தினசரி மூன்று வேலை உணவு சப்ளை செய்யும்மாறு திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரடி அறிவுரை வழங்கியதின் பேரில் இந்நகராட்சி சார்பாக உணவு வழங்கப்பட்டு வருவதற்கு 15.09.2020 ஆம் தேதியன்று **E.C.S** மூலமாக தொகை ரூ.1.00 லட்சம் வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்: 996/2020/எச்1

19. வாணியம்பாடி நகராட்சிக்கு சொந்தமான திருமண மண்டபத்தின் கட்டிடம் அருகில் செல்லும் மின் கம்பம்/மின் பாதையை (LT/Line DCW) மாற்றம் செய்ய அதற்கான கட்டணம் ரூ.59,980/-யை செலுத்த வேண்டும் எனவும், உதவி பொறியாளர், நகர் பிரிவு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், வாணியம்பாடி அவர்களின் க.எண்.உ.பொ/இ&ப/நகரம்/வாணி /DCW/அ.எண்.118/2020-21, நாள்17.10.2020 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதின் அடிப்படையில், இத்தொகையினை 2020-21-ஆம் ஆண்டிற்கான பொது நிதியில் இருந்து ரூ.59,980/- தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.201/2020/இ1.

20. இந்நகராட்சியின் திரு.H.ஷப்பீர் அகமது நகராட்சி ஒப்பந்ததாரர் பொது நிதி மற்றும் திட்ட பணிகள் வேலை செய்து வரும் நிலையில் பட்டியியலில் பிடித்தம் செய்யப்படும் வைப்புத்தொகையினை வழங்க கோரியதன் அடிப்படையில் வைப்புத்தொகை பதிவேடு செய்யபட்டதில் 2011-12 ஆம் ஆண்டு முதல் 2015-16-ம் ஆண்டு வரை தணிக்கை நடைபெறாமல் காலம் தாழ்த்தி தணிக்கை நடைபெற்று முடிக்கப்பட்டுள்ளதால் ரூ.7,01,365/- பட்டியியல் பிடித்தம் செய்த தொகை வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது. அன்னாருக்கு வழங்க வேண்டிய தொகை ரூ.7,01,365/- காலம் கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் பராமரிக்கப்படுவதால் நகராட்சி பொறியாளரின் குறிப்பின்படி மேற்படி ஒப்பந்ததாரருக்கு வைப்புத்தொகை திரும்ப வழங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.2533/2020/அ3

**21.** வாணியம்பாடி நகராட்சி பகுதியில் உள்ள சொத்துவரி விதிப்புகள் மற்றும் காலிமனை வரிவிதிப்பு ஒரு சில இனங்கள் நீண்ட காலமாக நகராட்சிக்கு வரி செலுத்தாமல் நிலுவை உள்ளதால் ஒவ்வொரு வருடமும் வசூல் சதவீகிதம் குறைவாக உள்ளதை கண்டறிந்து நகராட்சி வருவாய் உதவியாளர்கள் மூலம் நேராய்வு செய்யப்பட்டதில் ஒரு சில வரி விதிப்புகள் இரட்டிப்பாகவும், ஒரு சில வரி விதிப்புகள் நீண்ட காலமாக குடியிருப்பு இடித்து தரைமட்டமாக உள்ள நிலையிலும், ஒரு சில வரி விதிப்புகள் தவறுதலாக உள்ளதையும் கண்டறிந்து அதற்கான கேட்புகளை நீக்கம் செய்ய கோரியதின் அடிப்படையில் நகராட்சி வருவாய் ஆய்வர் மேற்படி வரிவிதிப்பு எண்களை நேரடி ஆய்வு செய்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் காணும் வரி விதிப்புகளை நீண்ட காலமாக வசூல் செய்ய இயலாத நிலை உள்ளதாலும் தவறுதலாக கேட்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது எனவும் மேற்படி வரிவிதிப்பு எண்களுக்கு உண்டான கேட்பினை 2020–2021–ல் இரண்டாம் அரையாண்டு வரை தள்ளுபடி செய்ய பரிந்துரை செய்யப்பட்டதை நகராட்சி ஆணையர் 5–விழுக்காடு நேராய்வு செய்து கேட்பினை தள்ளுபடி செய்ய தகுதியான வரிவிதிப்பு எண்கள் என உறுதி செய்யப்பட்டதின் அடிப்படையில் பட்டியலில் காணும் சொத்துவரி 231–வரிவிதிப்பு எண்களுக்கான கேட்பு தொகை ரூ.15,61,793/– மற்றும் காலிமனை 31– வரிவிதிப்பு எண்களுக்கான கேட்பு தொகை ரூ. 2,42,675/– தள்ளுபடி செய்யவும், அதற்கான வரிவிதிப்பு எண்களை கணணி மூலம் நீக்கம் செய்யவும் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க. எண். 2773/2020/அ1**

22. அரசாணை எண் 298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை நாள் 02.09.2020–ன் படி கொரோனா நோய் தொற்று தடுப்பு பணி காரணமாக பிறப்பிக்கப்பட்ட பொது ஊரடங்கு காலத்தில் 01.04.2020 முதல் 31.05.2020 வரை உள்ள காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத கடைகள் /வரியில்லா இனங்களுக்கு வாடகை தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்களித்து ஆணையிடப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண் 8763/2020/ஆர்–2 29.09.2020 ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள அறிவுரையின் படி பொது ஊரடங்கு காலத்தில் செயல்படாத கடைகள்/வரியில்லா இனங்களுக்கான பட்டியலினை தயார் செய்து உரிய அலுவலர்கள் கொண்டு அமைக்கப்பட்ட குழு மூலம் கேட்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் காணும் கடைகள் / வரியில்லா இனங்களில் கேட்பினை 01.04.2020 முதல் 31.05.2020 வரை உள்ள காலத்திற்கு வாடகை தொகையினை செலுத்துவதில் இருந்து விலக்களிக்கவும் கணிணி மூலம் கேட்பினை நீக்கம் செய்யவும் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u> மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண். 2773/2020/அ1

23. கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிக்காரணமாக பிறப்பிக்கப்பட்ட பொது ஊரடங்கு காலத்தில் 01.04.2020 முதல் 31.05.2020 வரை உள்ள காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத கடைகள்/வரியில்லா இனங்களுக்கு வாடகை தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து அரசாணை எண்.298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 02.09.2020-யை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு.: மன்றம் பதிவு செய்யலாம்

ந.க.எண்.2773/2020/அ1

24.வாணியம்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரானா நோய் தடுப்பு பணிக்கு வார்டு எண்.1 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் தினமும் கிருமிநாசினி திரவம் தெளிக்கவும், பேருந்து நிலையம், அரசு மருத்துவமனை, வாரச்சந்தை, வங்கி(ATM) மையங்கள், கோவில்கள், மசூதிகள் மற்றும் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் வாடகை டிராக்டர் மற்றும் லாரிகளில் கிருமிநாசினி திரவம் தெளிக்கவும் உண்டான பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் பணியில் அமர்த்திக்கொள்ள ரூ.3.23 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து செய்துக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.2766/2020/இ2.

25. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகள் சுற்றறிக்கை, ந.க.எண்.3336/J2/2020-9, நாள்:02.04.2020-ன்படி பொது நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியில் கீழ்க்கண்ட பணியை மேற்கொள்ள விலைப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில் 18.09.2020-ந் தேதியன்று பெறபட்ட விலைப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | கொரோனா நோய் தடுப்பு பணிக்கு வார்டு எண்.1 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் தினமும் கிருமிநாசினி திரவம் தெளிக்கவும், பேருந்து நிலையம், அரசு மருத்துவமனை, வாரச்சந்தை, வங்கி(ATM) மையங்கள், கோவில்கள், மசூதிகள் மற்றும் பொது மக்கள் அதிகம் கூடம் இடங்களில் வாடகை டிராக்டர் மற்றும் லாரிகளில் கிருமிநாசின திரவம் தெளிக்கவும் உண்டான பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் பணியில் அமர்த்திக்கொள்ளதல். | 3.23 | 1) எஸ்.தாமோதரன், வாணியம்பாடி. | 3,15,060/- குறைவு |
| | | | 2) ஜி.என்.விஜயசீனிவாசன், வாணியம்பாடி | 3,20,400/- அதிகம் |
| | | | 3) வி.பி.முருகன், வாணியம்பாடி. | 3,24,850/- அதிகம் |

அ.கு : 1) பொது நிதி 2020-21-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் பணிக்கு 18.09.2020-ந் தேதியன்று விலைப்புள்ளி கோரிய குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. எஸ்.தாமோதரன், ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி ஏற்று தனி அலுவலரின் முன்னனுமதி பெற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2766/2020/இ2

26. நகராட்சி பகுதியில் பரவி வரும் கொராணா நோய் தடுப்பு பணிக்கு வார்டு எண்.1 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் தினமும் கிருமிநாசினி திரவம் தெளிக்கவும், பேருந்து நிலையம், அரசு மருத்துவமனை, வாரச்சந்தை, வங்கி(ATM) மையங்கள், கோயில்கள் மசூதிகள் மற்றும் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் வாடகை டேங்கர் லாரி மூலம் தினசரி கிருமி நாசினி தெளிக்கும் பணியினை 2020-21-ஆம் ஆண்டின் பொது நிதியில் செலவு செய்துக்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2812/2020/இ2.

27. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகள் சுற்றறிக்கை, ந.க.எண்.3336/J2/2020-9, நாள்:02.04.2020-ன்படி பொது நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியில் கீழ்க்கண்ட பணியை மேற்கொள்ள விலைப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில் 26.10.2020-ந் தேதியன்று பெறபட்ட விலைப்புள்ளியை ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | கொரோனா நோய் தடுப்பு பணிக்கு வார்டு எண்.1 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் தினமும் கிருமிநாசினி திரவம் தெளிக்கவும், பேருந்து நிலையம், அரசு மருத்துவமனை, வாரச்சந்தை, வங்கி(ATM) மையங்கள், கோயில்கள் மசூதிகள் மற்றும் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் வாடகை டேங்கர் லாரி மூலம் தினசரி கிருமி நாசினி தெளிக்கும் பணி. | 9.00 | 1) எஸ்.தாமோதரன், நாயக்கனூர் போஸ்ட், ஆலங்காயம் வழி, வாணியம்பாடி. | 9,00,000/- குறைவு |
| | | | 2) ஜி.என்.விஜயசீனிவாசன், வாணியம்பாடி | 9,22,500/- அதிகம் |
| | | | 3) வி.பி.முருகன், வாணியம்பாடி. | 9,30,000/- அதிகம் |

அ.கு : 1) பொது நிதி 2020-21-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

3) மேற்காணும் பணிக்கு 26.10.2020-ந் தேதியன்று விலைப்புள்ளி கோரிய குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. எஸ்.தாமோதரன், ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி ஏற்று தனி அலுவலரின் முன்னனுமதி பெற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2812/2020/இ2

**28.** வாணியம்பாடி நகராட்சி சி.எல். சாலையில் பொதுப்பணி துறைக்கு சொந்தமான பழைய தரைப் பாலம் வார்டு எண்.'டி' பிளாக் எண்.'**5**', நகரளவு எண்.'**1**'– ல் மாற்றி புதிய உயர் மட்ட பாலம் அமைக்க (WRO) துறையின் அனுமதி பெற்று நகராட்சியின் மூலம் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஒப்புதல் மற்றும் நிர்வாக அனுமதி பெற தீர்மானம் எண்.**333**, நாள்:11.05.2018–ல் மன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் சி.எல். சாலையில் பொதுப்பணி துறைக்கு சொந்தமான பழைய தரைப் பாலம் வார்டு எண்.'டி' பிளாக் எண்.'**5**', நகரளவு எண்.'**1**'– ல் மாற்றி புதிய உயர் மட்ட பாலம் அமைக்கும் இடத்தின் மண் பரிசோதனை செய்ய இவ்வலுவலக ந.க.எண்.**944/2018**/இ**1**, நாள்:**18.09.2020–**ல் கடிதத்தில் கோரியதின்படி, The Principal Thanthai Periyar Government Institute of Technology, Vellore அவர்களின் கடிதம் எண்.TPGIT/PCE/SOIL/2019**–20**/**61–**C, நாள்:07.10.2020-ன்படி மண் பரிசோதனைக்கான கட்டண தொகை ரூ.17,700/-ஐ செலுத்த கோரியதின் பேரில், மேற்படி தொகையினை **2020–21–**ஆம் ஆண்டின் பொது நிதியில் இருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.944/2018/இ1.

2020-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ம் நாள் வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு வாணியம்பாடி நகராட்சி அலுவலகத்தில் ஓர் சிறப்பு கூட்டம் நடைபெறும்

1. வாணியம்பாடி நகராட்சி 2018-ஆம் ஆண்டு திறந்த வெளியில் கழிப்பிடமாக பயன்படுத்தும் நிலை இல்லையென்று சான்று மத்திய அரசின் நகர்புறம் மற்றும் வீட்டு வசதி அமைச்சகத்தின் சான்று பெற்றுள்ளது. தற்போது இந்நகராட்சி பகுதிகளில் தனிநபர் கழிப்பறைகள் கட்டுதல், சமுதாய கழிப்பறைகள் கட்டுதல் ஆகிய பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது திறந்தவெளி கழிப்பிடங்களற்ற நகராட்சி **(ODF+)** என அறிவிக்கவும் இது சம்மந்தமான நகராட்சி அறிவிப்பினை பொது மக்கள் தங்கள் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் கோரி ஏதேனும் ஒரு தினசரி தமிழ் நாளிதழில் வெளியிட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.2946/2015/எச்1